[1975 அக்டோபர் 27

(முற்பகல் 10-00)

திரு. மு. முத்தையா: அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கப்படுகிற எண்ணிக்கை மாவட்டத்திற்கு மாவட்டம் வித்தியாசப்படுகிறது. அந்தந்த மாவட்டங்களில் இருக்கக்கூடிய அரிசனங்களுடைய ஜனத்தொகை அடிப்படையில் வீடு கட்டிக் கொடுப்பது நிர்ணயம் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: அந்த எண்ணிக்கை மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபட்டுத்தான் தீரும். ஒவ்வொரு மாவட்டத்திலும் அரிசனங்கள் தொகை எந்த அளவுக்கு இருக்கிறது என்பது ஒன்று. இரண்டாவது, ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட மனைகள், எடுக்கப்பட்ட மனைகளில் அரசாங்கத் திட்டத்தின்கீழ், விதிகளின்படி குடியிருப்புக்கு இடம் முறையானபடி தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில்தான் வீடுகள் எண்ணிக்கை நிர்ணயிக்கப்படுகின்றன.

* 85 வினா.—திரு. வை. பாலசுந்தரம்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அச்சிறுபாக்கம் தொகுதியில் எண்டத்தூர் அரிசன காலனியில் அரிசன வீட்டு வசதி வளர்ச்சி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டித் தரும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: ஆம்.

திரு. வை. பாலசுந்தரம்: தற்போது அச்சிறுபாக்கம் எண்டத்தூரில் கட்டப்பட்டுள்ள வீடுகள் ஏற்கனவே நல இலாகாவில் கட்டப்பட்ட இல்லங்கள் ஆகும். அதிலே 50 சதவிகிதம் அரிசன மக்களுக்குத்தான் வீடுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. மீதியுள்ள 50 சதவிகிதத்தினருக்கு தமிழ்நாடு அரிசன வீடு கட்டும் வாரியத்தின் மூலம் வீடு கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: செங்கற்பட்டு மாவட்டம் அச்சிறுபாக்கம் தொகுதியில் எண்டத்தூர் கிராமத்தில் இக் கழகம் வகுத்துள்ள திட்டத்தில் இரண்டாவது கட்டமாக 77 வீடுகள் கட்ட உத்தேசித்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]